**செ. கு. எண்: 012** **நாள்: 26.01.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்

வாழ்த்துச் செய்தி – 26.1.2019

கிராமப்புற மக்களிடையே சிறுசேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி, “களஞ்சியம்” எனும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திய திருமதி. சின்னபிள்ளை அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்கு எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பிரபலமான வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாக விளங்கும் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட ஆன்மீக குரு பங்காரு அடிகளாருக்கு மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

பரத நாட்டியத்தில் தனக்கென தனி முத்திரை பதித்த நர்த்தகி நடராஜ் அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில் உள்ள ஸ்டான்லி மருத்துவமனையில் பணியாற்றி ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற மிகச் சிறந்த அறுவை சிகிச்சை நிபுணரான மருத்துவர் திரு. ராமசாமி வெங்கடசாமி அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்கு எனது வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்துரில் பிரபலமான சங்கரா கண் மருத்துவமனையின் நிறுவனர்/நிர்வாக அறங்காவலர் மற்றும் கண்சிகிச்சை மருத்துவ நிபுணரான மருத்துவர் ஆர்.வி. ரமணி அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்கு எனது வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மேசைப்பந்து விளையாட்டுப் போட்டியில், சர்வதேச அளவில் பல பதக்கங்களை வென்று, தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்த திரு. சரத்கமல் அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகம் முழுவதும் தனது “டிரம்ஸ்” இசையால் மக்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் டிரம்ஸ் இசைக் கலைஞர் திரு. ஆனந்தன் சிவமணி அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்கு எனது வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைப்படத் துறையிலும், நடனக்கலையிலும் சிறந்து விளங்கும் திரு. பிரபு தேவா அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைத்ததற்கு எனது வாழ்த்துகளைஅன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்மஸ்ரீ விருதினை பெற்று, தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்த திருமதி. சின்ன பிள்ளை; ஆன்மீக குரு பங்காரு அடிகளார்; நர்த்தகி நடராஜ்; மருத்துவர் ராமசாமி வெங்கடசாமி; மருத்துவர் ஆர்.வி. ரமணி; திரு. சரத்கமல்; திரு. ஆனந்தன் சிவமணி மற்றும் திரு. பிரபு தேவா ஆகியோருக்கு தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் மீண்டும் ஒருமுறை எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, மேன்மேலும் பல விருதுகளை பெற எனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**